# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 01.06.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10773/B/2023**

திரு.M.P.தங்கவேல் — மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1) மனுவின் கீழ், 02.12.2022 தேதியிட்ட மனுவில், கோபி வட்டம் மொடச்சூர் கிராமம் புல எண்.113/2-ல் 1.36.0 ஹெக்.பூமி, புல எண்.114/2-ல் 1.68.0 ஹெக் பூமி ஆக மொத்தம் 3.04.0 ஹெக் பூமி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க நில எடுப்பு நடவடிக்கைகள் கடந்த 35 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்து, இது தொடர்பாக நில எடுப்பு அலுவலர் தீர்வம் எண்.9/93.94, நாள் 29.03.2024, சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்,WP.9999/1988 தீர்ப்பு நாள் 22.07.1997, சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்,WP.19814/1999 தீர்ப்பு நாள் 25.09.2001 ஆகியவை உள்ளிட்ட 24 இனங்களில் தகவல்கள் வழங்கக்கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 03.12.2022ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக தகவல் அளித்துள்ளார். உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, மனுதாரர் 25.01.2023 அன்று பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை, மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர், ஈரோடு மாவட்டம் அவர்கள் 10.02.2023ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக தகவல் அளித்துள்ளார். முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, மனுதாரர் 14.06.2023 அன்று பிரிவு 19(3)ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 28.02.2024 இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கீழ்கண்டவாறு மனுதாரர் தரப்பில் வாதம் பதிவுசெய்யப்பட்டது.

- கோபி வட்டம் மொடச்சூர் கிராமம் புல எண்.113/2-ல் 1.36.0 ஹெக்.பூமி, புல எண்.114/2-ல் 1.68.0 ஹெக் பூமி ஆக மொத்தம் 3.04.0 ஹெக் பூமி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க நில எடுப்பு

நடவடிக்கைகள் கடந்த 35 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், தனக்கு நில எடுப்பு பூமியில் பங்கு விகிதாச்சார அடிப்படையில் பாத்தியம் உள்ளது என்றும், இந்த நில எடுப்பு நடவடிக்கையால் தனக்கும் மற்ற நில உடமைதாரர்களுக்கும் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும், நில எடுப்பு பூமி கோபி நகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள விலைமதிப்பு மிக்க பூமியாகும் என்றும், அரசும் இதனையே வலியுறுத்தி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்து நில எடுப்பு நடவடிக்கையை கைவிடுவதாக தெரிவித்துள்ளது என்றும், சென்னை உயர்நீதிமன்றம் பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒப்படை செய்ய மாற்றிடம் தேர்வு செய்து வழங்க உத்தரவுகள் பிறப்பித்துள்ளது என்றும், நில எடுப்பு பூமி சுவாதீனம் எடுக்கவில்லை என்று அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரமாணபத்திரம் வாயிலாக தெரிவித்துள்ளது என்றும், சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகள்படி நில எடுப்பு நடவடிக்கைகள் கைவிட அரசுக்கு மாவட்ட நிர்வாகம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது என்றும், 2006ம் ஆண்டு வாக்கில் மொடச்சூர் கிராம நிர்வாக அலுவலர், பயனாளிகள் 46 பேர் மட்டுமே உள்ளனர் என்றும், தற்போது இவர்களில் பெரும்பாலானோர் காலமாகியிருக்கக்கூடும் என்றும், மாவட்ட நிர்வாகம், வருவாய்த்துறையில், சென்னை உயர்நீதிமன்றம் வழங்கி இருந்த தீர்ப்புப்படி மாற்றிடம் நேரடி கிரயம் மூலம் நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளது என்றும், நில எடுப்பினை கைவிட தனி வட்டாட்சியர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகிய உயர் அதிகாரிகள் பலமுறை நில எடுப்பு பூமியை பார்வையிட்டு சென்றுள்ளனர் என்றும், மேற்படி அதிகாரிகள் நில எடுப்பு கைவிடப்பட்ட உத்தரவு விரைவில் வழங்கப்படும் என்று உறுதியளித்துக் சென்றுள்ளனர் என்றும், ஆகவே இது தொடர்பாக தகவல்களை வழங்கக்கோரியுள்ளதாகவும், நாளதுவரை உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

2. பொது அதிகார அமைப்பின் சார்பாக கீழ்கண்ட விவரங்கள் பதிவு செய்யப்பட்டது:-

,ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், மொடச்சூர் கிராமம், புல எண்.113 மற்றும் 114-ல் 3.04.0 ஹெக்டேர்(7.51 ஏக்கர்) பரப்புள்ள பூமியினை மிகவும் பிற்படுத்தப்பட்ட இனமக்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க சத்தியமங்கலம் ஆதிதிராவிடர் நலம் தனி வட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், நில உடமைதாரர்களான திருவாளர்கள் 1.பழனியப்பன், 2,தங்கவேல், 3.சிங்காரம் ஆகியோர் கூட்டாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலமெடுப்பு நடவடிக்கையினை இரத்து செய்யக்கேட்டு தாக்கல் செய்த நீதிபேராணை வழக்கு எண்.19814/1999-ல், இடைக்கால தடைக் கோரிய மனு எண்.W.M.P.29086/1999-ல் சுவாதீனம் எடுக்க மட்டும் தடைவிதிக்கப்பட்டு நிலமெடுப்பு நடவடிக்கையினை தொடரலாம் என தெரிவித்து 15.12.1999 இடைக்கால உத்திரவு பிறப்பிக்கப்பட்டதன் பேரில் சத்தியமங்கலம் ஆதிதிராவிடர் நலம் தனி வட்டாட்சியர், நிலமெடுப்பு நடவடிக்கையை தொடர்ந்து 29.03.1999ம் நாளில் தீர்வம் எண்.9/93-94-ல்நிலமெடுப்பு நடவடிக்கையினை நிறைவு செய்தார் என்றும், இந்த நிலமெடுப்பு தீர்வப்படி ஒரு ஏக்கர் ஒன்று ரூ.40,000/- என நிர்ணயித்து நிலமெடுப்பு மொத்த விஸ்தீரணம் 7.51 ஏக்கர் பூமிக்கு 30 விழுக்காடு இழப்பீட்டாற்றுத் தொகை மற்றும் மரங்களின் மதிப்பினை சேர்த்து மொத்தம் ரூ.4,68,106/- நில உடமைதாரர்களுக்கு வழங்கவேண்டும் என்று தீர்வத்தில் முடிவு செய்யப்பட்டிருந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை வழக்கில் நிலமெடுப்பு பூமியை சுவாதீனம் பெற தடை விதிக்கப்பட்டமிருந்தமையால் நிலமெடுப்பு பூமிணை நிலமெடுப்பு அலுவலரால் சுவாதீனம் பெறவில்லை என்றும்,

நில உடமைதாரர்கள் தீர்வத்தொகையான ரூ.4,68,106/-ஐ பெற மறுத்துவிட்டமையால் 30.03.1994ம் நாளில் சத்தியமங்கலம் சார்நிலைக்கருவூலத்தில் வருவாய் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் நில உடமைதாரர் தாக்கல் செய்திருந்த நீதிப்பேராணை எண்.19814/99 மீதான தீர்ப்புரை 25.09.2001-ல் தீர்ப்பளிக்கப்பட்டத என்றும், மேற்படி தீர்ப்பில் அரசு தீர்பை பெற்றுக் கொண்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் மத்திய நிலமெடுப்பு சட்டம் பிரிவு 18ன் கீழ் நில உடமைதாரர்கள் கூடுதல் இழப்பீடு தொகை பெற, சிவில் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்று ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- இந்த தீர்ப்பின்படி நில உடமைதாரருக்கு கூடுதல் இழப்பீடு தொகை வழங்க மத்திய நிலமெடுப்புச் சட்டம் பிரிவு 18-ன் கீழ் பரிந்துரை மேற்கொள்ளப்படும்போது நில உடமைதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண்.19814/99 தீர்ப்பளிக்கப்பட்ட நாளான 25.09.2001ம் நாளில் உள்ள நிலமதிப்பின் அடிப்படையில் கூடுதல் இழப்பீட்டுத் தொகை நீதிமன்றம் நிர்ணயிக்க வாய்ப்புள்ளது என தெரிவித்து 01.07.2002ம் நாளில் ஈரோடு நிலமெடுப்பு அரசு வழக்கறிஞர் கருத்துறை வழங்கியுள்ளார் என்றும், இந்த கருத்துரையின் அடிப்படையில் நிலமெடுப்பு பூமி 7.51 ஏக்கர் பூமிக்கு விலை மதிப்பு நிர்ணயம் கணக்கிடப்பட்டுள்ளது என்றும், கோபி சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டிப்பதிவேட்டினப்டி புல எண்.113ல் 3.36 ஏக்கர் மற்றும் புல எண்.114ல் 4.15 ஏக்கர் ஆக மொத்தம் 7.51 ஏக்கருக்கு இழப்பீட்டுத்தொகை ரூ.3,92,58,835/- மற்றும் அவார்டு தீர்ப்பளிக்கப்பட்ட நாளான 29.03.1994லிருந்து 26.03.1995 முடிய ஒரு வருடத்திற்கு 12 சதவீதம் வீதம் ரூ.47,11,060/-ம் 29.03.1995 முதல் 28.07.2005 வரை 9 சதவீதம் வட்டித் தொகை ரூ.3,53,32,951/-ஆக மொத்தம் ரூ.7,93,02,846/- அரசிற்கு நிதி இழப்பு ஏற்படும் வகையில் உள்ளது என்றும், ரூ.7,93,02,846/- தொகையானது 28.07.2005 வரை முடிய வட்டி கணக்கிடப்பட்டு நில உடமைதாரர்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகை என நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும் என்றும், **இதனால் மேலும் அரசுக்கு பல கோடி ரூபாய் வட்டி என்ற விதத்தில் அரசுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட வாய்ப்பும் உள்ளது** என்றும் தெரிவித்தார். திரு.ஜி.குப்புசாமி, கோபி வட்டார முடிதிருத்துவோர் நல சங்கம், செயலாளர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மக்களுக்காக வீட்டுமனை வழங்க கோபி வட்டம், மொடச்சூர் கிராமம், ரீச.113, 114-ல் நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொண்ட இப்புலத்தை அரசு சுவாதீனம் எடுத்து வீட்டுமனை ஒப்படை வழங்கக் கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதி பேராணை வழக்கு எண்.18508/2009 மற்றும் சி.எம்.பி.2/2012-ஐ தாக்கல் செய்துள்ள நிலையில், இந்த நிலமெடுப்பு பூமி கோபி நகராட்சி மையப்பகுதியில் அமைந்துள்ளதால், நிலத்தின் மதிப்பு பல கோடிக்கு மேலாக உள்ளது என்றும், அதனால் நிலமெடுப்பு பூமியை அரசால் சுவாதீனம் எடுத்து வீட்டுமனை ஒப்படை வழங்க இயலாத நிலை உள்ளது என்றும், இந்த நிலமெடுப்பு நடவடிக்கையினை கைவிட அரசு முடிவு செய்துள்ளது என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்ததன் பேரில், சென்னை உயர்நீதிமன்றம் இதனை ஏற்றுக்கொண்டு இப்பயனாளிகளுக்கு மாற்று இடம் தேர்வு செய்து நேரடி கிரையம் மூலம் அரசு கையகப்படுத்தி வீட்டுமனை ஒப்படை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 08.08.2012-ல் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- மேற்படி தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு கோபி நகர் பகுதிதயை சுற்றி 5 கிலோமீட்டர் தொலைவுக்குள் அமைந்துள்ள அளுக்குளி கிராமம், மொடச்சூர் கிராமம், லக்கம்பட்டி கிராம, பாரியூர் கிராமம் மற்றும் குள்ளம்பாளையம் கிராமம் ஆகிய கிராமங்களில் வீட்டுமனை ஒப்படைப்பிற்காக அரசு நேரடி

கிரையம் பெற பூமியை வழங்க சம்மதம் தெரிவிக்கும் நில உடமைதாரர்கள் குறித்து அறிக்கை அனுப்பி வைக்குமாறு கோபி வட்டம், வருவாய் வட்டாட்சியரை தொடர்ந்து நாளதுவரை அறிக்கை கேட்கப்பட்டது என்றும், கோபி வருவாய் வட்டாட்சியர் மேற்கண்ட கிராமங்களில் அரசு நேரடி கிரையம் பெற பூமியை வழங்க யாரும் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார் என்றும், இந்த நிலமெடுப்பு நேர்வில் நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொண்ட நாளிலிருந்து நில உடமைதாரர் நிலமெடுப்பு நடவடிக்கையினை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்திலும், கோபி சிவில் நீதிமன்றத்திலும் வழக்கு செய்யப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுவந்தமையால் நிலமெடுப்பு அலுவலர், வழக்கு பணிகளை மட்டுமே சீராக கவனித்து வந்துள்ளார் என்றும், இந்த நிலமெடுப்புக்கு தேவைப்படும் பயனாளிகள் தொடர்பாக விசாரணை செய்யவோ, பயனாளிகளின் எண்ணிக்கையை இறுதி செய்யவோ இயலாநிலை தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்றும், நிலமெடுப்பு பூமி தற்போது முற்புதராகவும், தரிசாகவும் உள்ளது என்றும், இந்த நிலமெடுப்புக்காக சத்தியமங்கலம் சார்நிலை கருவூலத்திலிருந்து காசாக்கிய ரூ.4,68,106/-ஐ சத்தியமங்கலம் சார்நிலை கருவூலத்தில் 30.03.1994-ல் வருவாய் வைப்பீட்டில் வைக்கப்பட்ட தொகை 01.04.1998-ம் நாளில் காலாவதி ஆகியமையால், அத்தொகையை மீளப்பெற்று அரசுக் கணக்கில் வரவு வைக்க அரசாணை பிறப்பிக்கக் கேட்டு சென்னை பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல(பி.ந.2) துறை அரசு இணை செயலாளர் அவர்களுக்கு 06.09.2019 அன்று முன்மொழிவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

- **நிலமெடுப்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்திய பூமியை ஐந்தாண்டுகளுக்குள் சுவாதீனம் பெறப்படவில்லை என்றால் அந்த நிலமெடுப்பு காலாவதியாகிவிடும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், இந்த நிலமெடுப்பு புலம் மிகுந்த விலைமதிப்புள்ள பூமி என்பதினாலும், மேற்கூறிய காரணங்களினால் இந்த நிலமெடுப்பு நடவடிக்கையினை முழுவதும் இரத்து செய்ய அரசாணை வழங்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.136755/97/ந6, நாள் 26.05.2022 தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, அரசு துணைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2)துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கும், ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சேப்பாக்கம் அவர்களுக்கும் கேட்டுக்கொள்ளப்பட்டது.**

- மனுதாரர் மேற்படி நிலமெடுப்பு தொடர்பாக நில எடுப்பு அலுவலர் தீர்வம் எண்.9/93.94, நாள் 29.03.2024, சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்,WP.9999/1988 தீர்ப்பு நாள் 22.07.1997, சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்,WP.19814/1999 தீர்ப்பு நாள் 25.09.2001 ஆவணங்கள் உள்ளிட்ட 25 ஆவண நகல்களை கோரியுள்ளார் என்றும், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக இவ்வலுவலக ப.மு.30717/2022/ந6, 03.12.2022ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், மொடச்சூர் கிராமம், புல எண்.113 மற்றும் 114-ல் 3.04.0 ஹெக்(7.51 ஏக்கர்) பூமியானது மிகவும் பிற்பட்டோர் சமுதாய மக்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்ய நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றும், மேலும் நிலமெடுப்பு நடவடிக்கையினை மீளப்பெறுவது தொடர்பான முன்மொழிவானது அரசு துணைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

நலத்(பிந2)துறை மற்றும் ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேற்படி கோப்பானது நடவடிக்கையில் உள்ளதாலும், அரசின் இறுதி உத்தரவினை எதிர்பார்த்து உள்ளதாலும், மனுதாரர் கோரிய 25 இனங்களுக்கான ஆவணங்கள் ஏதும் வழங்க இயலாது என்று தகவல் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

- இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், கோபி சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டிப்பதிவேட்டினப்டி புல எண்.113ல் 3.36 ஏக்கர் மற்றும் புல எண்.114ல் 4.15 ஏக்கர் ஆக மொத்தம் 7.51 ஏக்கருக்கு இழப்பீட்டுத்தொகை ரூ.3,92,58,835/- மற்றும் அவார்டு தீர்ப்பளிக்கப்பட்ட நாளான 29.03.1994லிருந்து 26.03.1995 முடிய ஒரு வருடத்திற்கு 12 சதவீதம் வீதம் ரூ.47,11,060/-ம் 29.03.1995 முதல் 28.07.2005 வரை 9 சதவீதம் வட்டித் தொகை ரூ.3,53,32,951/-ஆக மொத்தம் ரூ.7,93,02,846/- அரசிற்கு நிதி இழப்பு ஏற்படும் வகையில் உள்ளது என்றும், ரூ.7,93,02,846/- தொகையானது 28.07.2005 வரை முடிய வட்டி கணக்கிடப்பட்டு நில உடமைதாரர்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகை என நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும் என்றும், **இதனால் மேலும் அரசுக்கு பல கோடி ரூபாய் வட்டி என்ற விதத்தில் அரசுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட வாய்ப்பும் உள்ளது** என்றும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் 30.05.2022 தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, **அரசு துணைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2)துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கும், ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சேப்பாக்கம் ஆகியோருக்கும் கடிதம் வாயிலாக பரிந்துரை செய்துள்ளதை இந்நேர்வில் இவ்வாணையம் சுட்டிக்காட்டி, நிலமெடுப்பு தொடர்பாக**, 28.07.2005 வரை வட்டி கணக்கிடப்பட்டு நில உடமைதாரர்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகை ரூ.7,93,02,846/- என்று கணக்கிடப்பட்டுள்ள நிலையில், தற்போது வரை மேற்படி தொகை கணக்கிடும் பட்சத்தில், அத்தொகை **மேலும் அதிகரித்து, பல கோடி ரூபாய் வட்டி என்ற விதத்தில் அரசுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அரசு துணைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2) துறை அவர்களும், ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சேப்பாக்கம் அவர்களும் மேற்படி நிலமெடுப்பு சம்மந்தமாக, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ள கோப்பின் மீது தனிகவனம் செலுத்துமாறு இவ்வாணையம் அறிவுறுத்தி, கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது:-**

1. *மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம் அவர்கள் 30.05.2022 தேதியிடப்பட்டு, அரசு துணைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2) துறை அவர்களும், ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சேப்பாக்கம் ஆகியோருக்கு அனுப்பியுள்ள பரிந்துரை கடிதத்தின் மீது தற்போது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள், மேற்படி அரசு துணைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களிடமிருந்து பெற்று, அது குறித்த விரிவான அறிக்கையினை, பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்கள் மூலம் இவ்வாணையத்தில் 03.05.2024 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது.*
2. *பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், ஈரோடு அவர்கள், மனுதாரர் 02.02.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 6(1)மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பான கோப்பு நடவடிக்கையில் உள்ளதால் தகவல்கள் வழங்க இயலாது என்று தெரிவித்துள்ள நிலையில், தற்போது மேற்படி நடவடிக்கை முடிவுற்றிருக்கும் பட்சத்தில், மனுதாரர் கோரிய 25 இனங்களுக்கான ஆவண நகல்களை சட்டப்பிரிவு 7(6)ன் கீழ் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி, மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையத்தில் 03.05.2024 அன்று நேரில் சமர்ப்பிக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது.*
3. *பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை வழங்குவதோடு தங்களது கடமைகள் முடிவுற்றதாக எண்ணாமல், தகவல்களின் சாராம்சத்தை புரிந்துகொண்டு, அது குறித்து தங்களது உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுச் சென்று, துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய கோப்புகள் மீது நடவடிக்கை மேற்கொண்டால், இதுபோன்று அரசிற்கு நிதி இழப்பு ஏற்படுவதை பெரும்பாண்மையாக தவிர்க்க இயலும் என்று இவ்வாணையம் தனது கருத்தினை பதிவு செய்கின்றது.*

3. மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவினை தொடர்ந்து இவ்வழக்கு 03.05.2024, 28.08.2024, 27.09.2024, 03.07.2025, மற்றும் 05.02.2026 ஆகிய நாட்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பொது அதிகார அமைப்பின் சார்பாக கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது:-

- பொதுத் தகவல் அலுவலர்/அரசு சார்புச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2)துறை, தலைமைச் செயலகம் அவர்கள், உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் கிராமம் ரீ.ச.எண்.14/3 மற்றம் 20/2,21/12 ஆகிய புலங்களில் மொத்தம் 5.00 ஏக்கர் புன்செய் நிலங்களை பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் பொருட்டு முதற்கட்டமாக அடையாளம் கண்டறியப்பட்டுள்ளதாக அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், அவ்வறிக்கையின் மீது சில கூடுதல் விவரங்களை அரசு கடிதம் எண்.7524/பிந2(1)2019-22, நாள் 21.02.2025, 03.06.2025 மற்றும் 19.06.2025 தேதியிடப்பட்ட கடிதத்தின்படி கோரப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகின்றது என்றும், மேலும், சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலமெடுப்பு செய்யும் பொருட்டு மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்ட கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/12, ஆகிய புலங்களில் மொத்தம் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியினை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக தனி வட்டாட்சியர் மற்றும் கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியர் ஆகியோரால் 27.06.2025 அன்று புலத்தணிக்கை செய்யப்பட்டு நிலமெடுப்பு நடவடிக்கைக்கு நிலம் வழங்க இசைவு தெரிவித்த மொடச்சூர் சிராமத்தைச் சார்ந்த திரு.சரவணன் என்பவரிடம் நேரிடையாக பேசப்பட்டதில் கொளப்பலூர் கிராமம் ரீ.ச.14/3, 21/1-ல் 1.58 செண்ட் பூமியானது சார்பதிவாளர் அலுவலகத்தில் 04.07.2025 அன்று கிரையம் செய்து நிலமெடுப்பு செய்ய வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும், மீதமுள்ள பு.ஏ.3.42 பூமியினை தொடர்ந்து ஒவ்வொன்றாக இம்மாத இறுதிக்குள் கிரையம் செய்து நிலமெடுப்பு செய்து வழங்குவதாக தெரிவித்துள்ளார் என்றும், எனவே, மேற்படி புலங்களில் பாத்தியப்பட்ட சுமார் 50-க்கு மேற்பட்ட பட்டாதாரர்களின் வாரிசுகளை ஒருங்கிணைத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் செய்த பின்னர், ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கு ஆகஸ்ட் மாத இறுதிக்குள் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மேற்படி கடிதத்தின்படி, ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் அவர்களிடம் கூடுதல் விவரங்களான, தேர்வு செய்யப்பட்ட 200 பயனாளிகளில் தற்போது 70 தகுதிவாய்ந்த பயனாளிகள் உள்ளதாகத் தெரிவித்துள்ள நிலையில், புதியதாக தேர்வு செய்யப்பட்ட பகுதியில் மேற்காண் 70 பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கீடு செய்யப்படவிருக்கும் மனையின் அளவு மற்றும் அதன் மதிப்பு, மேலும் அவர்களுக்கு தேவைப்படும் நிதி குறித்த விரிவான அறிக்கை மற்றும் மேற்குறிப்பிட்ட 70 பயனாளிகளுக்கு புதிய இடத்தில் மனைப்பட்டா வழங்கப்பட்டவுள்ள நிலையில், ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம், மொடச்சூர் கிராமத்தில் புல எண்கள்.113 மற்றும் 114 மொத்தம் 3.04.0 ஹெக்டேர் நிலம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய மேல்நடவடிக்கை குறித்த விரிவான அறிக்கை, ஆகிய கூடுதல் விவரங்கள் ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது என்றும், மேற்படி விவரங்கள் பெறப்பட்டவுடன் மேல்நடவடிக்கை தொடரப்படும் என்றும் தெரிவித்தார்.
- பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், ஈரோடு அவர்கள், கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியரின் அலுவலக ந.க.2261/2024/அ4, நாள் 30.06.2025 தேதியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளபடி, கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/1,2 ஆகிய காலைகளில்

நிலமெடுப்பு செய்யும் மொத்தம் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியில் ரீ.ச.எண்.14/3 காலையானது பட்டா எண்.302-இன்படி கொமரசாமி மூப்பன் மற்றும் ஆறு நபர்களுக்கும், 20/2 காலையானது பட்டா எண்.843-இன்படி பொங்கியாமூப்பன் மகன் மற்றும் 4 நபர்களுக்கும், 21/1 காலையானது பட்டா எண்.2346-இன்படி இராமசாமி நாடார் மற்றும் 7 நபர்களுக்கும், 21/2 காலையானது பட்டா எண்.2296-இன்படி இராமநாமி நாடார் மற்றும் 3 நபர்களுக்கும் பூர்வீகப்படி கூட்டாகப் பாத்தியப்பட்டுள்ளதாக ஆவணங்கள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் தெரியவருகிறது என்றும், மேற்படி புலங்களில் பாத்தியப்பட்ட சுமார் 50-க்கு மேற்பட்ட பட்டாதாரர்களின் வாரிசுகளை ஒருங்கிணைந்து சார்வதிவாளர் அலுவலத்தில் பத்திரம் செய்த பின்னர், ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கு ஆகஸ்டு மாத இறுதிக்குள் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து, கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியரின் அறிக்கையினை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

- 23.09.2025 அன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டு அலுவலர், பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் அவர்கள், கடந்த 16.09.2025 அன்று கொளப்பலூர் கிராமம், புல எண்.21/1ல் பு.ஏ100 பூமியானது திரு.சரவணன் என்பவர் பெயரில் கிரையம் செய்ய இருந்த நிலையில், பட்டாதாரர்களின் வாரிசுகள் புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் போன்ற வெளியூரில் வசித்து வருவதால் ஒருவர் நேரில் ஆஜராகாததால், மேற்படி கிரையம் எதிர் வரும் 24.09.2025 அன்று மாற்றி வைக்கப்பட்டுள்ளது என கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியர் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றும், சார்பதிவாளர் அலுவலகத்தில் மீதமுள்ள பூமியினை இம்மாத இறுதிக்குள் கிரையம் செய்து நிலமெடுப்பு செய்து ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு பட்டியலிடப்பட்ட 70 பயனாளிகளுக்கு ஓரிரு மாதங்களில் வீட்டுமனைப்பட்டா வழங்கி அதன் விவரத்தினை அனுப்பிவைப்பதாக தெரிவித்துள்ளார்.

- 13.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/அரசு சார்புச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந2)த் துறை, தலைமைச் செயலகம் அவர்கள், சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நிலமெடுப்பு செய்யும் பொருட்டு மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்ட கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/1,2 ஆகிய காலைகளில் மொத்தம் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியினை நிலமெடுப்பு நடவடிக்கைக்கு நிலம் வழங்க இசைவு தெரிவித்த மொடச்சூர் கிராமத்தைச் சார்ந்த திரு.சரவணன் கிரையம் செய்து நிலமெடுப்பு செய்ய வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளதை தொடர்ந்து, கோபிசெட்டிபாளையம் இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.2314/2025, நாள் 15.07.2025-ன்படி மொத்தம் 3.25 ½ சென்ட் பூமி மேற்படி திரு.சரவணன் என்பவர் பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நேர்வில் 22.09.2025 அன்று ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட்ட தகவலில் 0.43.30 சென்ட் நிலம் மேற்படி திரு.சரவணன் என்பவரின் பெரியல் கிரையம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது என்றும், அதனை தொடர்ந்து தற்பொழுது 03.03.2026 அன்று 3.25 ½ சென்ட்டி பூமி கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலமெடுப்புக்கு பின் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கு மேற்படி புலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தெரிவித்துள்ளதாகவும், எனவே மேற்கண்ட விவரங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு

கோரி அரசுக்கு விரிவான அறிக்கை/ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேல்நடவடிக்கை எடுக்க இயலும் என்றும், அரசளயில் எடுக்க வேண்டிய நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

- ஈரோடு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நல அலுவலகம் சார்பாக ஆஜராக பிரதிநிதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், அவர்கள் அந்தியூர் சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலராக பணியினை கவனிக்க வேண்டியுள்ளதால், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றும், சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நிலமெடுப்பு செய்யும் பொருட்டு மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்ட கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/1,2 ஆகிய காலைகளில் மொத்தம் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியினை நிலமெடுப்பு நடவடிக்கைக்கு நிலம் வழங்க இசைவு தெரிவித்த மொடச்சூர் கிராமத்தைச் சார்ந்த திரு.சரவணன் கிரையம் செய்து நிலமெடுப்பு செய்ய வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளதை தொடர்ந்து, கோபிசெட்டிபாளையம் இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.2314/2025, நாள் 15.07.2025-ன்படி மொத்தம் 3.25 ½ சென்ட் பூமி மேற்படி திரு.சரவணன் என்பவர் பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும், தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலமெடுப்புக்கு பின் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கு மேற்படி புலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

**4.** மேற்படி விசாரணை நாட்களை தொடர்ந்து, 26.05.2026 முற்பகல் அன்று இறுதியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அன்றைய விசாரணையில், திரு.H.சுரேஷ், பொதுத் தகவல் அலுவலர்/அரசு சார்புச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2)துறை, தலைமைச் செயலகம் அவர்களும், திரு.K.தமிழரசு, கண்காணிப்பாளர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சேப்பாக்கம் அவர்களும், பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நல அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களும் ஆஜரானார்கள்.

5. இன்றைய(26.05.2026) விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/அரசு சார்புச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந2)த் துறை, தலைமைச் செயலகம் அவர்கள், சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நிலமெடுப்பு செய்யும் பொருட்டு மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்ட கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/1,2 ஆகிய காலைகளில் மொத்தம் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியினை நிலமெடுப்பு நடவடிக்கைக்கு நிலம் வழங்க இசைவு தெரிவித்த மொடச்சூர் கிராமத்தைச் சார்ந்த திரு.சரவணன் கிரையம் செய்து நிலமெடுப்பு செய்ய வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளதை தொடர்ந்து, கோபிசெட்டிபாளையம் இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.2314/2025, நாள் 15.07.2025-ன்படி மொத்தம் 3.25 ½ சென்ட் பூமி மேற்படி திரு.சரவணன் என்பவர் பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நேர்வில் 22.09.2025 அன்று ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட்ட தகவலில் 0.43.30 சென்ட் நிலம் மேற்படி திரு.சரவணன் என்பவரின் பெரியல் கிரையம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது என்றும், அதனை தொடர்ந்து தற்பொழுது 03.03.2026 அன்று 3.25 ½ சென்ட்டி பூமி கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலமெடுப்புக்கு பின் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கு மேற்படி புலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தெரிவித்துள்ளதாகவும், எனவே மேற்கண்ட விவரங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு விரிவான அறிக்கை/ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேல்நடவடிக்கை எடுக்க இயலும் என்றும், அரசளயில் எடுக்க வேண்டிய நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்றும், நிலயெடுப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.4,68,106/- சத்தியமங்கலம் சார்நிலை கருவூல அலுவலகத்தில் 30.03.1994 அன்று செலுத்தப்பட்ட தொகையானது நான்கு ஆண்டுகளுக்கு பிறகு தானாகவே அரசு கணக்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தொகையை மீளப்பெற்று அரசு கணக்கில் செலுத்த தனியாக அரசாணை வழங்க தேவையில்லை என்றும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

6. ஈரோடு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நல அலுவலகம் சார்பாக ஆஜரான பிரதிநிதி, மாவட்ட நிர்வாகத்திற்கும், சென்னை, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களுக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்துகளில் நகல்களை வழங்கக் கோரி 02.12.2022-ல் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ் மனுதாரர் திரு.தங்கவேல் என்பவர் மனு செய்துள்ளார் என்றும், மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண்.10773/2023 நாள். 03.07.2025-ன்படி தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலர் 13.03.2026 அன்று ஆஜராகி கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும், சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/1,2 ஆகிய காலைகளில் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள காலை மாற்று நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/1,2 ஆகிய காலைகளில் நிலமெடுப்பு செய்யும் மொத்தம் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியில் ரீ.ச.எண்.14/3 காலையானது பட்டா எண்.302-இன்படி கொமரசாமி மூப்பன் மற்றும் ஆறு நபர்களுக்கும், 20/2 காலையானது பட்டா எண்.843-இன்படி பொங்கியாமூப்பன் மகன் மற்றும் 4 நபர்களுக்கும், 21/1 காலையானது பட்டா எண்.2349-இன்படி இராமசாமி நாடார் மற்றும் 7 நபர்களுக்கும், 21/2 காலையானது பட்டா எண்.2296-இன்படி இராமசாமி தாடார் மற்றும் 3 நபர்களுக்கும் பூர்வீகப்படி கூட்டாகப் பாத்தியப்பட்டுள்ளதாக ஆவணங்கள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் தெரியவருகிறது.

7. இந்நேர்வில் சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நிலமெடுப்பு செய்யும் பொருட்டு மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்ட கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண். 14/3, 3A, 21/1A ஆகிய காலைகளில் மொத்தம் 287 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியினை நிலமெடுப்பு நடவடிக்கைக்கு நிலம் வழங்க இசைவு தெரிவித்த மொடச்சூர் கிராமத்தைச் சார்ந்த திரு. சரவணன் என்பவர் கிரையம் செய்து நிலமெடுப்பு செய்ய வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளதை தொடர்ந்து, கோபிசெட்டிபாளையம் இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண். 2314/2025 நாள். 15.07.2025-ன்படி கொளப்பலூர் கிராமம், ரீ.ச.என். 21/1-ல் பு.ஹெக். 0.21.85 பூமியும் (40.54 சென்ட்) கோபிசெட்டிபாளையம் இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண். 2315/2025-நாள். 15.07.2025ன்படி கொளப்பலூர் கிராமம், புல எண். 21/1-ல் பு.ஹெக், 0.21.45 பூமியும் (பு.ஏ. 0.53 சென்ட்) கோபிசெட்டிபாளையம் இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எனர். 4157/2025- நாள். 12.12.2025ன்படி கொளப்பலூர் கிராமம், புல எண். 14/3-ல் பு.ஹெக் 0.18.63 பூமியும் (பு.ஏ.0.46 சென்ட்) புல எண். 21/1 டிஹெக் 0.04.05 பூமியும் (பு.ஏ. 0.10 சென்ட்) கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண். 752/2026- நாள். 03.03.2026ன்படி கொளப்பலூர் கிராமம், புல எண். 14/3A-ல் டிஹெக் 0.44.94 பூமியும் (பு.ஏ. 1.11 செனிட்) புல எண். 21/1A-ல் பு.ஹெக். 0.05.26 பூமியும் (487. 0.13 சென்ட்)ஆக மொத்தம் பு.ஏ.2.87 சென்ட் பூமி மேற்படி திரு.சரவணன் என்பவர் பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. மேலும், கோபி வட்டம், மொடச்சூர் கிராமம், புல எண் 113 மற்றும் 114-ல் 3.04.0 ஹெக்டேர் (7.51 ஏக்கர்) நிலத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனமக்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க கையகப்படுத்தப்பட்ட நிலம் பொது நோக்கம் அல்லது பிற நோக்கங்களுக்கான தொகையினை புதுப்பிப்பது குறித்தும் மற்றும் நிலமெடுப்பு நடவடிக்கையினை கைவிடுவது குறித்தும் விரிவான அறிக்கையினை பார்வை 1 மற்றும் 2- ல் கேட்டு கொண்டதற்கிணங்க இவ்வலுவலக ந.க.எண்.136755/1997/ந6, நாள்:30.05.2022 மூலம் சென்னை, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பேரில் நிலமெடுப்பு நடவடிக்கையினை கைவிடுவது தொடர்பாக அரசாணை ஏதும் பிறப்பிக்கப்பட்டிருப்பின் அதன் நகல் கோரி சென்னை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களிடம் பார்வை 4-ல் காணும் கடிதத்தின் வாயிலாக கோரப்பட்டுள்ளது. இந்நேர்வில் மேற்படி அரசாணை பெறப்பட்ட பின் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்று தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

9. இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது:-

1. ***தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

2. ***இருப்பினும், மேல்முறையீட்டாளர் இவ்வழக்கில் தகவல் கோரிய ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம்வட்டம், மொடச்சூர் கிராமம், புல எண்.113 மற்றும் 114-ல் 7.5 ஏக்கர் நிலம் சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்காக 1894-ன் ஆண்டில் நிலஎடுப்புச் சட்டப்படி கையகப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை எதிர்த்து நிலஉரிமையாளர்களரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குகள் அரசுக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், நில ஆர்ஜிதத்தை தொடர்வதற்கு எந்தத் தடையும் இல்லை என்றும், நில ஆர்ஜிதத்தை தொடர்ந்தால் அரசுக்கு அதிகமான நிதி இழப்பீடு ஏற்படும் எனத் தெரிவித்து நிலஆர்ஜித நடவடிக்கைகள் கைவிட மாவட்ட நிர்வாகத்தால் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டும், இன்றளவும் பிரஸ்தாப நிலங்கள் நிலஉடைமையாளர்களின் பெயர்களிலேயே பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் கிராமம், ரீ.ச.எண்.14/3, 20/2 மற்றும் 21/1,2 ஆகியகாலைகளில் 5.00 புஞ்சை ஏக்கர் விஸ்தீரணமுள்ள காலை மாற்று நிலம் தேர்வு செய்யப்பட்டு, 24 நபர்களுக்கு பூர்வீகப்படி கூட்டாக பாத்தியப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 2.87 புஞ்சை ஏக்கர் பூமியினை நிலமெடுப்பு நடவடிக்கைகக்கு நிலம் வழங்க இசைவு தெரிவித்த திரு.சரவணன் என்பவர் கிரையம் செய்து நிலமெடுப்பு செய்யவழங்கப்படுவதாக தெரிவித்ததையடுத்து, கோபிசெட்டிபாளையம் இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.2314/2005 நாள் 15.07.2025, பத்திர எண்.2315/2025 நாள் 15.07.2025, பத்தி எண்.4157/2025 நாள் 12.12.2025, பத்திர எண்.752/2026 நாள் 03.03.206-ன்படியும் மொத்தம் 2.87 சென்ட் பூமி திரு.சரவணன் என்பவர் பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது. இந்நேர்வில் தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலமெடுப்புக்கு பின் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கு மேற்படி புலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஈரோடு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலர் 20.05.2026 தேதியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவர், புல எண்.113 மற்றும்***

*114-ல் 7.51 ஏக்கர் நிலத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனமக்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்ககையகப்படுத்தப்பட்ட நிலம் பொது நோக்கம் அல்லது பிறநோக்கங்களுக்கான தொகையினை புதுப்பிப்பது குறித்தும் மற்றும் நிலமெடுப்பு நடவடிக்கையினை கைவிடுவது குறித்தும் விரிவான அறிக்கையினை 30.05.2022 அன்று சென்னை, மிகபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதன்பேரில் நிலமெடுப்பு நடவடிக்கையினை கைவிடுவது தொடர்பாக அரசாலை பெறப்பட்ட பின் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும்என்றும், தெரிவித்துள்ளார்.*

3. *சென்னை-9, பிற்படுத்தப்பட்டோ, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மேல்முறையீட்டு அலுவலர்/ அரசு கூடுதல் செயலாளர் 22.05.2026 தேதியிட்ட அறிக்கையில், வீட்டு மனைப்பட்ட வழங்குவது தொடர்பாக மிகப்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலஆணையரிடமிருந்து விரிவான அறிக்கை பெறப்பட்டபின் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நிலஎடுப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.4,68,106/- சத்தியமங்கலம் சார்நிலை கருவூல அலுவலகத்தில் 30.03.1994 அன்று செலுத்தப்பட்ட தொகையானது நான்கு ஆண்டுகளுக்கு பிறகு தானாகவே அரசு கணக்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி தொகையை மீளப்பெற்று அரசு கணக்கில் செலுத்த தனியாக அரசாணை வழங்க தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.*
4. *ஈரோடு மாவட்ட கருவூல அலுவலர் 19.12.2018 தேதியிட்ட கடிதத்தில் கோபி வட்டம், மொடச்சூர் கிராமம், ரீ.ச.எண்.113 மற்றும் 11-ல் 7.51 ஏக்கரில் நில எடுப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.4,68,106/-ஐ சத்தியமங்கலம் சார்நிலை கருவூலத்தில் 30.03.1994-ல் செலுத்தப்பட்டு, மேற்கண்ட தொகையானது 31.03.1998டுல் காலாவதியாகி விட்டதாகவும், நாளது தேதிவரை பெற்று வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளதாகவும், இத்தொகையினை திரும்பப் பெறுவது குறித்து சென்னை, பிறப்படுத்தப்பட்டோர், மிகப்பிறப்படுத்தப்பட்டோர் நலத்துறை அரசு துணைசெயலருக்கு 05.11.2020 அன்று இயக்குநரால் முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.*

5. *இவ்வழக்கு இவ்வாணையத்தில் 28.02.2024 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஏறக்குறை இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வந்துள்ள நிலையில், இன்றளவும் பொது அதிகார அமைப்பின் சார்பாக அரசாணை பெறப்பட்ட பின் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்ற பதிலையே இறுதியாக சமர்ப்பித்துள்ளது வருத்தத்திற்குரியதாகவும், நாளதுவரை இவ்வினத்தில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதாகவுமே இவ்வாணையம் கருதுகின்றது.*
6. *மேற்குறித்த ஈரோடு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலர் மற்றும் சென்னை-9, பிற்படுத்தப்பட்டோ, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மேல்முறையீட்டு அலுவலர்/அரசுகூடுதல் செயலாளர் ஆகியோரின் அறிக்கைகளின்படி, மேல்முறையீட்டாளர் தகவல் கோரியுள்ள புலங்கள் தொடர்பாக இதுநாள் வரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. சமூகத்தில் மிகவும் பின்தங்கிய எளிய தரப்பினரின் வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்படுவதும், பின் இழப்பீடு தொகை வழங்காமலும், அதனைத் தொடர்ந்து மாற்றுநிலம் வழங்கப்படாததும், இதன்மூலம் அவர்களின்*

*வாழ்வதாரத்தை கேள்விக்குரியதாக அமைவதுடன், அரசின் மெத்தனபோக்கை எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். ஆகவே, எளிய மக்களின் நலனை கருத்தில் கொண்டு, இவ்வழக்கில் தொடர்புடைய புலங்களை சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா தொடர்பாக அறிக்கைகள் ஏதும் பெற இருந்தால், அதனை விரைவாக பெற்றும், அவற்றின் மீது இறுதியான முடிவினை காலதாமதம் செய்யாமல் எடுக்கவும் அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோ, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அவர்களுக்கு இவ்வாணையம் பரிந்துரைக்கின்றது.*

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10773/B/2023</u>**

**<u>பெறுநர்</u>**

அரசு செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2)துறை,
தலைமைச் செயலகம்,சென்னை - 600 009.

பொதுத் தகவல் அலுவலர்/அரசு சார்புச் செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் நலத்(பிந2)துறை,
தலைமைச் செயலகம்,சென்னை - 600 009.

பொதுத் தகவல் அலுவலர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.

திரு.M.P.தங்கவேல்,த/பெ.பழனியப்பன்,
112, மாரியம்மன் கோயில் வீதி,
பெரிய மொடச்சூர் - 638 476,
கோபிசெட்டிபாளையம்.

Copy to: File
Sj/Ps-15/06/26